

# வாருங்கள் கெத்சமனே...

## நாமும் கெத்சமனே தோட்டத்திற்கு போவோம்

இயேசு அடிக்கடி கெத்செமனே சென்றார். ஜெபம் செய்யவும், பிதாவோடு தனித்திருக்கவும் சென்றார். ஆனால் இந்த முறை வேறு மாதிரியான அனுபவமாய் இருந்தது. அவர் ஒரு பெரிய ஆவிக்குரிய யுத்தம் செய்ய சென்றார். இது மிகவும் கடினமான ஒன்றாய் இருந்தது. அங்கு அவர் வாதிக்கப்பட்டவராகவும், தள்ளப்பட்டவராகவும், நிந்தை சுமந்தவராகவும் காணப்பட்டார். ஆனாலும் பிதாவின் சித்தம் செய்ய தீர்மானித்தார்.

கர்த்தராகிய இயேசுவை பிதாவாகிய தேவன் இவ்வுலகத்திற்கு அனுப்பிய நோக்கத்தின் இறுதி நேரம் வந்து விட்டது. அவர் அனுப்பப்பட்டதின் நோக்கம் நிறைவேறின போது, அவரும் அந்த வேலையை செய்து முடிக்க இப்போது தம் முகத்தை நேராக்கினார். அவர் இந்த உலகத்திற்கு வந்ததும், அந்த நேரம் வந்த போது நன்கு புரிந்து கொண்டவராய், அப்போது நடக்க இருக்கும் கொடூரத்தின் தன்மையை தவிர்க்க அவர் பிரயாசப்படவில்லை.

அந்த குறிப்பிட்ட நேரம் வந்த போது, தன்னை ஆயத்தப்படுத்துவதற்காக தன்னுடனே தன் சீடர்களை அழைத்து கொண்டு கடைசியாக கெத்சமனே சென்றார். பரி. லூக்கா இந்த மறக்க முடியாத காட்சியை மிக தெளிவாக தம்முடைய சுவிசேஷத்தில் கையாண்டுள்ளார். அந்த இடம் ஒரு அழகான இயற்கை வனப்பு நிறைந்ததும், மற்றவர்களின் பார்வைக்கு மறைக்கப்பட்டதாயும், இருள் சூழ்ந்ததாயும் இருந்தது. கெத்சமனே ஒரு அழகான தோட்டம். நம்மை ஒரு அழகான தோற்றமாய் மாற்ற இயேசு அந்த தோட்டத்திற்கு சென்றார். சாலமோன் ராஜா தன்னுடைய உன்னதப்பாட்டு 4:12ல் இந்தத் தோட்டத்தை ஆலயத்திற்கு ஒப்பிட்டு சொல்லியுள்ளார்.

## கெத்சமனே என்பது ஒரு ஜெப ஜீவியத்தை காட்டுகிற இடம்

இயேசுவின் மரண வேதனை(கொடும் துயரம்)யை அறியாதவர்களாய் அவருடைய சீஷர்கள் மிகுந்த தூக்க மயக்கத்தில் இருந்தார்கள். இயேசு ஒருவராய் தனிமையில் போராடினார். நமக்கும் இதே போராட்டம் உண்டு. துரைத்தனங்களோடும், அதிகாரங்கள், இவ்வுலகத்தின் பொல்லாத ஆவிகளோடும் போராட்டம் உண்டு. ஆனால் இந்த போராட்டத்தை நாம் முழங்கா-ல் நின்றபடியேதான் செய்ய வேண்டியுள்ளது. அதைத்தான் லூக்கா. 21:36ல் "நாம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்" என்கிறார். "நாம் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் செய்ய வேண்டும்" என்று லூக்.18ல் சொல்-யுள்ளார். நாம் பிசாசின் மேல் வெற்றி சிறக்க வேண்டுமானால், நாம் அடிக்கடி இடைவிடாமல் தனிமையாக ஜெபம் செய்யத்தான் வேண்டும். கெத்சமனே தோட்டத்தில் நடந்த ஜெபம் போல தற்போது தனிமையிலும் நடக்கத்தான் வேண்டும். இயேசு ஜெபித்தது போல் சிலர் ஜெபிப்பதை காண்கிறோம். ஆனால் சிலரோ சீடர்களைப் போல் தூங்குவதையும் காண்கிறோம். எழும்புங்கள், இப்போது போவோம் வாருங்கள் என்றார். வெற்றிக்காக ஜெபம் செய்ய, பின்பு அவர்களால் வெகுதூரம் செல்ல இயலவில்லை. அவர்கள் ஜெபம் செய்யாததினால் அவரோடு கூட இருக்க முடியவில்லை. அது போல நாமும் தூங்கிவிடுவோமானால் அவர் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டோம். அவர்கள் தூங்கியதைப் போல நாம் தூங்காமல் இருப்போமாக. கெத்சமனேயில் சீடர்கள் செய்தது போல நாம் செய்யாமல், இயேசு செய்ததை செய்வோமாக.

கெத்சமனே தோட்டத்தில் இயேசு பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபம் செய்தார். அவர் மாமிச மரணம் ஏற்படுவதில் இருந்து விடுபடவா ஜெபித்தார்? இல்லை. நான் சிலுவையில் மரிப்பதற்காகவே வந்தேன் என்றார். அவர் மாமிசத்திலே மரித்தார். "நம்மை மாமிச சரீரத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவர்" என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது? மரணத்தின் வல்லமை அவருக்குள் பிரசிக்க இடம் கொடுத்து விடாதபடி தம்மை காத்துக் கொள்ள ஜெபித்தார். (அவருக்குள் இருந்த ஜீவனை காத்துக் கொள்ளத்தான் ஜெபித்தார்).

இப்படி தனக்குள் இருந்த ஜீவனைக் காத்துக் கொண்டு, மாமிச சரீரத்தில், மாமிச மரணம் அடைந்தபடியால், அந்த மாமிச மரணத்தை தம் ஜீவனால் வென்றார். இப்படி அவர் சாத்தானை ஜெயிக்க முடிந்தது. ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படி அப்படி ஆனார். அவர் நமக்காகவே கெத்சமெனேயில் வேண்டுதல் செய்தார், தமக்காக அல்ல.

'எனக்காக அவர் கெத்சமனேயில் ஜெபித்தார். என்னுடைய சித்தம் அல்ல, பிதாவின் சித்தம். அவருடைய பாடுகளுக்காக அவர் கண்ணீர் சிந்தவில்லை, எனக்காகவே சிந்தினார். எனக்காகவே பரிசுத்த ரத்தம் சிந்தினார்.

ஆதாம், ஏவாள் ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்தபோது, பாவத்தின் வல்லமை அவர்களுக்குள் பிரவேசித்தது. அதன் பிறகு அவர்களால் பிதாவின் நினைவுகளை பூர்த்தி செய்ய இயலவில்லை. அந்த பாவத்தின் வல்லமை,

நம்மையும் கடவுளிடமிருந்து பிரித்தது. கடவுள் (பிதா) செய்ய நினைத்ததற்கு இடையூறாக இவைகள் (பாவம்) தடுத்து நிறுத்தியது. இயேசு அந்த வல்லமையை கெத்சமனேயில் மேற்கொண்டார். (முறியடித்தார்). தற்போது மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராக இருக்கிறார். (வெளி.1:18) "ஏதேன் தோட்டத்தில் நடந்த யுத்தத்தில் அடைந்த தோல்வியை இயேசு கெத்சமனே தோட்டத்தில் வெற்றி சிறந்தார்."

நமக்கும் அதே கெத்சமனே அனுபவம் தேவையாகிறது. பாவத்தின் வல்லமையும், மரணமும் நம்மை ஆளுகை செய்யக் கூடாது. ஒருமனிதன் மூலமாக மரணம் நம்மை ஆட்கொண்டது (ரோமர். 5:21). நாமும் கடந்த நாட்களில் அப்படி ஜீவித்து வந்தோம். இப்போது நாம், நம் பழைய மனிதனை சிலுவையில் அறைந்து கொண்டே எல்லா வல்லமைகளையும் மேற்கொள்ளுகிறோம். நாம் நம்முடைய சுய நீதியையும், நம்முடையவைகளையும் ஒப்புக் கொடுத்து ஜீவிப்பதால், அளவற்ற தேவ கிருபையையும், தேவனால் கொடுக்கப்பட்ட தேவ நீதியையும் வெகுமதியாய் பெற்று ஆளுகை செய்கிறோம். இந்த தேவனால் கொடுக்கப்படும் ஆவி நம்மில் கிரியை செய்யாவிட்டால், பாவமும் மரணமும் நம்மை ஆளுகை செய்யும்.

## கெத்சமனே தேவ சித்தம் செய்யும் இடம்

கெத்செமனேயில் இயேசு அவருடைய முழு சித்தத்தையும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். என்னுடைய சித்தம் அல்ல, பிதாவின் சித்தம் நிறைவேறட்டும் என்று ஜெபித்தார். இந்த ஜெபம்தான் பிதாவை மகிழ்வித்தது. பிதாவின் சித்தம் செய்ய இயேசுவுக்கு ஒரு சரீரம் கொடுக்கப்பட்டது. தொடக்கமுதல் அதுவே அவர் சிந்தையாக இருந்தது. "இதோ உம் சித்தம் செய்ய வருகிறேன்" என்றார். "என்னை அனுப்பினவருடைய சித்தம் செய்வதே என் போஜனமாய் இருக்கிறது" என்றார். இயேசு பிதாவின் சித்தம் செய்யாமல் இருந்திருந்தால், மனித குலத்திற்கு மீட்பு ஏற்பட்டு இருக்காது.

அபிஷேகம் செய்யப்பட்ட மக்களில், ஒரு புதிய மனிதன் உருவாகி பிதாவின் சித்தம் மாத்திரம் செய்ய வேண்டும். மாமிசத்திற்குரிய மனிதனோ அவனுடைய சொந்த விருப்பத்தை மாத்திரம் செய்கிறான். ஆதலால் அவன் இடறல் அடைந்து, நிலை தடுமாறுகிறான். பரி. பவுல் கொரிந்தியர்களைப் பார்த்து நீங்கள் மாமிசத்திற்குரியவர்கள் என்கிறார்.

ஆனால் புதிய மனிதனோ, கர்த்தருடைய சித்தத்தை மாத்திரம் செய்கிறான். அவனுடைய அறிக்கை எப்போதும், என் சித்தம் அல்ல, உமது சித்தம் ஆண்டவரே என்கிறான். நாம் நம் சொந்த சித்தம் செய்வதி-ருந்து விடுபட்டால்தான் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியும். அதனால்தான் இயேசு சொன்னார். "என்னைப் பார்த்து கர்த்தாவே, கர்த்தாவே என்பவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டார்கள், ஆனால் "பிதாவின் சித்தம் செய்தவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பார்கள்" என்றார் இயேசு. (மத். 7:21)

## கெத்சமனே என்பது ஒரு உபத்திரவம்

கெத்செமனே என்பது ஒரு பாத்திரம். அது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட பாத்திரம் அல்ல, இருப்பினும் அதில் ஒரு ஆசீர்வாதம் இருக்கிறது. அது ஒரு உபத்திரவத்தின் பாத்திரம். சரீரப்பிரகாரமாகவும், ஆவியின் பிரகாரமாகவும் அந்த பாத்திரத்தில் பானம் பண்ண இயேசு தன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்தார். பழைய ஏற்பாட்டு பலிகளைப் போல இல்லாமல், தன்னை முழு மனதுடன் ஒரு பலியாக ஒப்புக் கொடுத்தார். அவருக்கு சம்பவிக்க போகும் உபத்திரவங்கள், மரணம் இவைகளை நன்கு அறிந்தவராய் இருந்தும் அவர் தம் முகத்தை எருசலேம் நோக்கித் திருப்பினார். இயேசு அந்த உபத்திரவங்களை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டிராவிட்டால், அந்த பாத்திரம் அவரை விட்டு நீக்கப்பட்டிருக்கும். மரணத்தின் வல்லமை அப்படியே இருந்திருக்கும். நாமும் நம் பாவத்தில் நிலைத்து இருந்திருப்போம்.

அநேகர் மகிமையை பெற்றுக் கொள்ளவும், அநேக பிள்ளைகளை மகிமைக்குள் கொண்டு வரவும் இயேசு அந்த உபத்திரவத்தின் பாதைக்குள் சென்றார், கடந்து வந்தார். நாமே அந்த பிள்ளைகள். புதிய எருசலேமாகவும், சீயோனாகவும் இருக்கிறோம். இயேசுவின் உபத்திரவமே நாம் பின்பற்ற வேண்டியவைகளாக இருக்கின்றன.

## கெத்சமனே என்பது ஒரு தள்ளப்பட்ட இடம்

கெத்சமனே தோட்டத்தில் இயேசுவானவர் காட்டிக் கொடுக்கப்பட்டார். கொலைக் குற்றவாளியை போல் பிடிக்கப்பட்டார். அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். (ஏசாயா. 53:12) அவர் பட்ட உபத்திரவத்தில் அவருடைய எந்த ஒரு சீடனும் பங்கு கொள்ளவில்லை, அவர் புறக்கணிக்கப்பட்டவருமாய் அசட்டை பண்ணப்பட்டவருமாய் காணப்பட்டார். (ஏசாயா. 53:3). ஒரு தேவனுடைய பிள்ளைக்கு எங்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டுமோ, அங்கு அவமரியாதைதான் கிடைக்கும். ஆவிக்குரிய மனிதன் மாத்திரமே இவ்விதமான அவமரியாதையை தாங்கிக் கொள்ள முடியும்.

எல்லா போராட்டங்களும் முடிந்த பிறகு, இயேசு தம் சீடர்களை பார்த்து "எழும்புங்கள் இப்போது போகலாம்" என்றார். பிதா தம்முடைய ஜெபத்தைக் கேட்டார். மரணத்தின் வல்லமையை சந்திக்க அவர் தயாராக இருந்தார். நம்முடைய (இயலாமை) (பிரதிபலன் அல்லது சாத்தான்) நம் கையில்தான் இருக்கிறது. நீ அவனை எதிர்கொள்ளலாம், போராடி வெற்றி கொள்ளலாம். அதற்கு நீ "கெத்சமனே" தோட்டத்தில் முதலில் வெற்றி பெற வேண்டும்.

கல்வாரியின் இறுதி வெற்றி கெத்செமனேயின் வழியாகத்தான் கிடைக்கும். நாம் ஜெபத்தில் போராடுவதை தெரிந்து கொள்ளாவிட்டால், நாம் நம் சித்தத்தை முழுவதுமாய் தேவனுக்கு ஒப்படைக்காவிட்டால், நம்மை பார்த்து பழி கூறுதலுக்கும், உபத்திரவங்களுக்கும் நாம் வெட்கப்படுவோமானால், வருகின்ற அக்கினி பரீட்சைக்கு தப்பிக்க நம்மால் கூடாமல் போகும். எனவே இயேசுவோடு கூட நாமும் கெத்சமனேக்கு போவோம்.

- நன்றி: சகோ. என். சாம்சன், சென்னை. போன்: 95-44-26621882

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

71, போல்டன்புரம் 3-ம் தெரு, தூத்துக்குடி-628 003 போன்: 91-461-2323633 / 0-94424-66250

Email: sovereign_jesus@bsnl.in / www.sovereignjesus.bravehost.com